செயலாக்கம் பெற அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அண்ணன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். கண்டிப்பாக கூடிய விரைவில் டெண்டர் கோரப்பட்டு, விரைவில் இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், மத்திய புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் கனிம ஆய்வுப் பணியைத் தடுத்து நிறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கோவில் ஒன்றியத்தில் பச்சாபாளையம், வீரசோழபுரம், வள்ளியரைச்சல், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில், மத்திய அரசின் உத்தரவிற்கிணங்க, மத்திய புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதாக வந்த செய்தியையடுத்து, பொதுமக்கள் மத்தியில் அச்சமும், கவலையும் ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து, நானும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் 2 ஆம் தேதியன்று சென்றபோது, மக்களுடைய அச்சத்தை உணர்கிற வகையில், மக்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பினார்கள். அதாவது, அந்தப் பகுதியில் சுரங்கம் தோண்டவிருப்பதாகவும், கனிம வளங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும், சுரங்கம் தோண்டப்பட்டால் நிலத்தடி நீர், தொழிற்சாலைகள் உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும் எனவும் விவசாயப் பெருங்குடி மக்களும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. உ. தனியரசு: *அப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்குகின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படுகிற அரசு, அந்தப் பகுதியில் அந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற வேண்டுதலோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமன்கரடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில், மத்திய அரசின் சார்பாக பொது நிறுவனம் ஒன்று கனிம ஆய்வு செய்வதற்கு, அந்தப் பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின்படி, புதிய கனிமங்களை ஆய்வு செய்வதற்கு மத்திய அரசாங்கம் சில நிறுவனங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. அந்த அனுமதியின்பேரில் அந்த நிறுவனங்கள் கனிம ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தில்* KIOCL (Kudremukh Iron Ore Company Limited) *குத்ரேமுக் இரும்புத் தாது நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் புதிய கனிமங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, ஆய்வு செய்யப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியருக்கு 4—3—2017 அன்றும், 18—9—2017 அன்றும் இயக்குநர், சுரங்கத் துறை அவர்கள் கடிதம் அளித்துள்ளார். ஆனால், மத்திய அரசாங்கத்திற்கு, மாநில அரசு எந்தவொரு இசைவினையும் வழங்கவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சியருக்குத் தெரியாமல், அந்தப் பகுதியிலே கனிம ஆய்வினை மேற்கொள்ளச் சென்றபோது பொதுமக்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்ததன் காரணமாக, அந்த ஆய்வுப் பணிகளை இன்றைக்கு மாநில அரசு முற்றிலுமாக நிறுத்தி வைத்திருக்கிறது. பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையிலே மாநில அரசு எந்த கனிம நிறுவனங்களுக்கும் கண்டிப்பாக அனுமதியளிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

முற்பகல் 11—55

(உ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். காலையில் நீங்கள் என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாது, மாண்புமிகு அமைச்சரிடம் பதில் கேட்டிருக்கிறேன், துறையிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். எனவே, நீங்கள் அமருங்கள் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்பத் திரும்ப எழுந்து நின்றீர்களென்றால் நான் என்ன செய்வது? ஒன்றும் செய்ய முடியாது, உட்காருங்கள்.*